**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No.88/2017**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 12 |
| Name | : Tr. C.Jayakumar |
| Father's Name | : Chandren |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.11.2021.

**முதல் விசாரணை.**

நான் 19.05.2020ம் வருடம் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆதிதிராவிட அலுவலகத்தில் துணை ஆட்சியராக பணிபுரிந்து விருப்ப ஓய்வு பெற்றேன். நான் கடந்த 12.08.2015 முதல் 29.08.2016 வரை சோழிங்கநல்லூர் வட்டாட்சியராக பணி செய்த போது 26.03.2016 அன்று சிபிசிஐடி போலீஸ்சார் எனக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார்கள். அதில் கிராம நிர்வாக அலுவலர் லோகநாதன் என்பவரின் பணி சம்பந்தமாக விவரங்கள் கேட்டுயிருந்தனர். நான் அவரின் சர்வீஸ் ரிஜிஸ்டர் மற்றும் அலுவலக கோப்புகளை பரிசீலித்து அவர் 11.08.1982 முதல் 29.11.2011 வரை பணிபுரிந்தார் என்ற விவரத்தை கடிதம் மூலம் அனுப்பினேன். நான் அனுப்பிய 26.05.2016 தேதியிட்ட லோகநாதனின் பணி விரங்கள் அடங்கிய விவரம் அதசாஆ 14 மற்றும் 15 ஆகும். கடந்த 30.11.2011ல் 17சி அரசு அடிப்படை விதிகளின் படி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் நபர் தான் லோகநாதன் ஆவார்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

எனக்கு லோகநாதன் என்பவரின் பணி விவரங்கள் தருமாறு எழுத்து மூலமாக கடிதம் வழங்கப்பட்டதா என்றால் தற்போது நினைவில்லை. நான் 1982ம் ஆண்டில் பணியில் சேரவில்லை.

1994 தான் பணியில் சேர்ந்தேன். என்னுடைய வாக்குமூலத்தில் நான் லோகநாதனின் சர்வீஸ் ரிஜிஸ்டரை பார்த்து விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி லோகநாதனின் பணி கால விவரங்களை நகல் எடுத்து உண்மை நகல் போலீஸ்சாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. 2011ம் வருடம் இந்த வழக்கு தாக்கல் செய்ய வில்லை என்றால் அது பற்றி தெரியாது. அதசாஆ யை நான் எவ்வித ஆவணங்களையும் பரிசீலனை செய்யாமல் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என கூறப்பட்டது.

**மறு விசாரணை.** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.R.Reena,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 88/2017

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW-13 |
| Name | : சுந்தர மூர்த்தி |
| Father/Husband's Name | : கதிர்வேல் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.12.2022.

**முதல் விசாரணை.**

நான் தற்போது Grade I Bench Clerk ஆக காஞ்சிபுரம் மாவட்ட நீதிமன்றம் எண் 2 ல் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2016 ல் தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் சுமார் 2 வருடம் தலைமை எழுத்தராக பணிபுரிந்தேன். 2016, மே மாதம் CBCID. காஞ்சிபுரம் போலிசார் உயர்நீதிமன்றம் உத்தரவை இணைத்து ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்தனர். அதில் ஒரு அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆவணங்கள் கோரப்பட்டிருந்தது. அந்த கடிதம் மே மாதம் நீதிமன்ற விடுமுறை காலத்தில் வந்ததால் நான் அதை வாங்கி பதிவு செய்தேன். விடுமுறைக்குப் பிறகு ஜீன் மாதத்தில் இருந்து சிரஸ்தார் வந்துவிட்டதால் அவருடைய மேற்பார்வைக்கு மேற்படி கடிதம் வைக்கப்பட்டு, அதன்பேரில் Junior Assistant மேற்படி ஆவணங்களை வழங்கியுள்ளார். மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யாத ஆவணங்கள் என அதற்குண்டா பதிவேட்டில் பதியப்பட்டது. மேற்படி பதிவேடு மற்றும் வேண்டுகோள் கடிதம் ஆகிய அனைத்தும் தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் உள்ளது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை

விசாரிக்கவில்லை.

**1ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை -**

பொதுவாக நீதிமன்றத்திற்கு வரும் அனைத்து கடிதத்தையும் பிரித்துப பார்த்து அதை வரவு பதிவேட்டில் பதிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். நான் குறிப்பிட்ட வேண்டுகோள் கடிதமானது யாருடைய பெயருக்கு அனுப்பப்பட்டது என்றால் சார்வு நீதிபதி, தாம்பரம் என்று குறிப்பிடப்பட்டிருந்து. அந்த கடிதத்தை நான் பிரிக்காமல் நீதிபதியின் பார்வைக்கு வைத்துவிட்டேன். அந்த தபால் நேரடியாக கொடுக்கப்பட்டுவிட்டது. நான் அதை பிரித்துப் பார்க்காததால் அதில் உள்ள விபரங்கள் எனக்குத் தெரியாது. மேற்படி கடிதத்தை நீதிபதி கையொப்பம் செய்து மீண்டும் எனக்கு வரப்பெற்றதில் அதை நான் பார்த்தேன். வரவு பதிவேட்டில் அனுபுனர் மற்றும் பெறுநர் ஆகிய விபரங்கள் மட்டும் எழுதுவது வழக்கம். அது நேரடியாக பெறப்பட்டதா அல்லது தபால் மூலம் பெறப்பட்டதா என்ற விபரங்கள் எழுதுவதில்லை. நான் அதில் என்னடைய கையொப்பத்தை செய்துவிட்டு வைத்துவிட்டேன். அதன் பிறகு உரிய நபரிடம் சென்றுவிட்டது என தெரிந்து கொண்டேன்.

**2 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என எடுத்துரைக்கப்பட்டது.

**மறு விசாரணை.** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open
court read over to the witness in Tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

Sd.R.Reena,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No.88/2017**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW-14 |
| Name | : Tr.Aldrin (Assistant Commissioner) |
| Father/Husband's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.04.2023.

**1st Accused Present. 2nd Accused absent. 317 Cr.P.C Petition filed and allowed.**

**முதல் விசாரணை–**

நான் தற்போது ஆவடி போக்குவரத்து புலனாய்வு விசாரணைப்பிரிவில் உதவி ஆணையாளராக பணிபுரிந்து வருகிறேன். சென்னை பெருநகர மத்தியக் குற்றப்பிரிவு–2 ல் காவல் ஆய்வாளராக இருந்தபோது கடந்த 07.07.2015 அன்று தாம்பரம் தாசில்தார் செல்வராஜ் என்பவர் கொடுத்த புகாரை வழிவழியாகப் பெற்று மத்திய குற்றப்பிரிவு–2 நிலையக் குற்ற எண். 77/2020 இதச பிரிவுகள் 465, 468, 471 உ/இ 120B ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

அன்றைய தினமே வாதி தாசில்தார் செர்வராஜ் என்பவடிரை விசாரணை செய்து

வாக்குமூலம் பதிவு செய்தேன். சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணையின்படி இந்த வழக்கை உயர் அதிகாரியின் உத்தரவின்பேரில் சிபிசிஐடிக்கு மாற்றம் செய்தேன். சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்தனர்.

**(1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் இன்று குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)**

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.R.Reena,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

**CC No.88/2017**

அ.சா.– 14 திரு. Alldrin நாள்–29.08.2023.

**சாட்சி முதல் விசாரணையன்றே குறுக்கு விசாரணைக்காக ஆஜர் ஆக வேண்டும் என்று குறிப்பிட்டு அனுப்பியதால் இன்று ஆஜரானதன் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**A2 தரப்பில் குறுக்கு விசாரணை–**

சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி நீதிமன்ற சாட்சியாக இருந்த பட்டியல் சாட்சி 8 செந்தாமரை கண்ணன் என்பவரை புகார் கொடுக்க சொன்னவிவரம் தெரியுமா என்றால் தெரியும். புகார்தாரர் கடந்த 2015 ல் தான் பணிக்கு சேர்ந்தார் விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை செல்லத்தக்கதல்ல என்றால் சரயில்ல.

**A1 தரப்பில் குறுக்கு விசாரணை–**

புகார்தாரர் புகாரை தவிர வேறு எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்றால் புகாருடன் கொடுக்கவில்லை ஆனால் விசாரணையின் போது கொடுத்தார். மேற்படி புகாருடன் உயர்நீதிமன்றத்தின் உத்தரவை கொடுத்தாரா என்றால் நினைவில்லை. நான் பதிவு செய்த FIR ல் அவ்வாறான சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் நகலை நான் பெற்றுதான் FIR பதிவு செய்தேன் என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கடந்த 10.8.2015 அன்று நான் பதிவு செய்த FIR ஐ உரிய வழி மூலம் CBCID போலிசாருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அவ்வாறு அனுப்பி வைத்ததற்கான covering letter நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் covering letter மூலம் அனுப்பிவைக்கப்படாது. **Proposal for transfer to another district or state on point of Jurisdiction** என்ற விவரம் இணைத்து அனுப்பப்பட்டது. அதன் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அது CBCID விசாரணை அதிகாரிகளுக்கு உட்பட்ட CD file ல் உள்ளது. நான் அனுப்பிய proposal ல் உயர்நீதிமன்ற உத்தரவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். FIR மற்றம் புகாரினை ஆலந்தூர், குற்றவியல் நீதிமன்றத்திற்கு மறுநாளே அனுப்பினேன். அசா.1 ஐ நான் விசாரணை செய்தேன் அதற்கு தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அந்த பதிவை CBCID க்கு அனுப்பினேன். நான் விசாரணை செய்த சாட்சியங்களின் வாக்குமூலங்களை அனுப்பினேனா என்றால் அனுப்பிவைத்தேன். ஆனால் அவ்வாறான வாக்குமூலங்கள் இல்லை என்றால் நாங்கள் வழக்கு கோப்புகளை CBCID க்கு அனுப்பிவிடுவோம். வழக்கின் FIR அனைத்தும் எதிரிக்கு எதிராக வழக்கு தொடர பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை -** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.R.Reena,
Judicial Magistrate No.I,
Chengalpattu.